மகத்துவம் தொடரும்...

''இன்று நீ நிகழ்ந்து விட்டாய்
வாழ்வின் வரங்கள் இன்னும் என்னுடன்
என்ன செய்யப் போகிறேன் இனியும்
சிகரங்களில் வாழ்ந்தாகிவிட்டது - நெடுங்காலம்
வாழ்க்கைப் பள்ளத்தாக்கில்
உலவும் நேரம் இனியோ''

- சத்குரு

தியானத்திலிருந்த பிரம்மச்சாரிகளும், அன்பர்களும் தியான லிங்கம் முழுமை பெற்றதை எண்ணி பரவசத்தோடு கண் திறந்தனர். ஆனால், தியான லிங்க கர்ப்பக் கிரகத்திலிருந்து சத்குருவை முத்த பிரம்மச்சாரிகள் தூக்கிக் கொண்டு போவதைப் பார்த்து மிகவும் கவலை கொண்டனர். அந்தக் கவலையில், பரவசம்கூட உடனே வற்றிவிட்டது. சத்குரு உடல்நிலைப் பற்றிய சிந்தனை எல்லோரையும் தொற்றிக் கொண்டது. சில மணித்துளிகளுக்கு பிறகு சத்குருவிடமிருந்து செய்தி வந்தது. ''தியான லிங்கம் பிரதிஷ்டை சிறப்பான முறையில் நடந்தேறியது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். பலவிதங்களில் இப்பணிகளில் தங்களை அர்ப்பணித்துக்கொண்ட மக்களுக்கும், என் குருவின் எண்ணத்தைச் செயலாக்கிய அனைவருக்கும் தலை வணங்குகிறேன். உங்களுக்கு என் நன்றியும், ஆசியும் எப்போதும் இருக்கும். என் உடல் நலக்குறைவு சிலகாலத்திற்கு மட்டும்தான்'' என்ற சத்குருவின் செய்தி படிக்கப்பட்டப் பிறகுதான் எல்லோரும் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்கள்.

ஏற்கனவே சொல்லி வைத்தபடி முழு சக்தி நிலையை அடைந்த தியான லிங்கத்தின் மேல் 1500 பேர் தாமிரச் செம்பினால் நீரை அபிஷேகம் செய்தனர். இரவில் பிரதிஷ்டை நடந்து முடிய, அடுத்த நாள் பகல் 12 மணிக்கு மகாமந்திர உச்சாடனத்துடன் அன்பர்களின் தியானம் துவங்கியது. மூன்று நாட்கள் கழித்து கூட்டுத் தியான வேள்வி நிறைவடைந்தது. அது முடிந்தவுடன் 'சத்குரு மீண்டும் வருகிறார்' என்று வந்த தகவல் அன்பர்களை எல்லையில்லா மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தியது. அனைவரும் வழிமேல் விழி வைத்து சத்குருவை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். சிங்கம் போல கம்பீரத்துடன் நடந்து வந்து தியான லிங்க வளாகத்துக்குள் நுழைந்தார் சத்குரு. அன்பர்கள் அப்படியே ஆனந்தத்தில் கரைந்தனர். முதலில் குரு பூஜையை முடித்தார் சத்குரு. பின்னர் மெல்லிய குரலில் பேசத் துவங்கினார்.

''தியான லிங்க எல்லைக்குள், அதன் சக்தி வளையத்துக்குள், நேரடியாகவோ அல்லது விழிப்புணர்வின் மூலமாகவோ வரக்கூடிய ஒவ்வொரு மனிதருக்கும், அவருக்கு விருப்பம் இருக்கும் பட்சத்தில், திறந்த நிலையில் இருந்தால் வாழ்க்கையின் முழுமையையும், ஆழத்தையும் அறிந்து உணர்வதற்கான வாய்ப்பினை தியான லிங்கம் வழங்கும். எனவேதான் 'தியான லிங்கம் ஒரு அற்புதம்' என்று நான் கூறுகிறேன். வாழ்க்கையின் அழகை, அதன் கம்பீரத்தை உணர நம்மை நாமே அனுமதிக்க வேண்டுமே தவிர, மற்றவை அனைத்துமே முட்டாள்தனமான செயல்களாகவே இருக்கும். உங்கள் வரம்புக்குட்பட்டு, புரிந்து கொள்ளும் தன்மையிலிருந்து நீங்கள் எதைச் செய்தாலும் அது முதிர்ச்சியில்லாத, பக்குவமற்ற செயலாகவே இருக்கும்.

தியான லிங்கத்தை உலகிற்கு பரிசளிப்பதிலோ, அர்ப்பணிப்பதிலோ நான் சந்தோஷப்படுகிறேனா அல்லது பரவசப்படுகிறேனா என்று எனக்குத் தெரியவில்லை. எந்த சொல்லை நான் உபயோகித்தாலும் அது சரியாக இல்லை. ஆனால், அது நிகழ்ந்து விட்டதால் ஒரு வகையில் நான் விடுபட்டிருக்கிறேன். இது நிகழ வேண்டும் என்பது என் விருப்பம் அல்ல; என் குருவின் விருப்பம். மூன்று பிறவிகளாக, பல மனிதர்களின் அன்புடனும், ஆதரவுடனும், புரிந்து கொள்ளும் தன்மையுடனும், எல்லாவற்றிற்கும் மேலாக குருவின் பெருங்கருணையுடனும் இது நிகழ்ந்திருக்கிறது. இன்று நான் வெறுமையாக உணர்கிறேன். நான் சந்தோஷமாக இருக்கிறேன் என்றோ, நிறைவடைந்திருக்கிறேன் என்றோ என்னால் சொல்ல முடியாது. ஆனால், ஒரு வெறுமையை உணர்கிறேன். ஏனென்றால் என் வாழ்வின் லட்சியம் முடிந்துவிட்டது'' -சத்குருவின் நீண்ட உரையில் சாதகர்களை உருக்கிய பகுதி இது.

ஆன்ம விடுதலைக்கான வித்தாக தியான லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்ட பின், தொடர்ந்து வந்த காலகட்டத்தில், அது தொடர்பாக சாதகர்களின் கேள்விக் கணைகள் தொடர்ந்தன. ''உண்மையில் தியான லிங்கத்தின் மகத்துவம் இன்னமும் இரண்டு தலைமுறைகளுக்கு அப்புறமே அறியப்படும். இப்போதைக்கு இது வாக்குவாதத்திற்கு உரியதாகவும், சர்ச்சைக்குரியதாகவுமே இருக்கும். இதன் உண்மையான தன்மையினை உணர மக்களுக்கு சிறிது காலம் ஆகும்'' என்று பிரதிஷ்டை முடிவுற்ற தருவாயிலும், அப்புறம் பல முறையும் சத்குரு சொல்லியிருக்கிறார். பலரது சந்தேகம் 'தியான லிங்கத்தை அணுகுவது எப்படி' என்பதுதான்.

"நீங்கள் தியான லிங்கத்திற்கு முன்பாகப் போய் வெறுமனே அமருங்கள். நீங்கள் எதையும் நம்புவதோ அல்லது நம்பாமல் இருப்பதோ முக்கியமில்லை. உங்கள் முன்பு நல்ல உணவு பரிமாறப்பட்டதாக வைத்துக் கொள்ளுங்கள். ஆனால், நீங்கள் நல்ல பசியிலும் இல்லை; அதேசமயம் உணவை வெறுக்கவும் இல்லை. திறந்த மனதுடன் இருங்கள். உங்கள் முன்னே இருக்கும் உணவை குறித்து எந்த மதிப்பீட்டையும் செய்யாதீர்கள். தியான லிங்கத்தின் முன்பு அப்படித்தான் அமர வேண்டும். ஒரு விருப்பத்தோடு, திறந்த தனிமையோடு அங்கு அமருவீர்களானால், தியான லிங்கம் கல் வடிவிலான ஒரு குறியீடு மட்டுமல்ல; எல்லாவிதங்களிலும் உயிர்ப்புத் தன்மையுடன் விளங்கி, உங்கள் ஆழ்மனதை அது ஊடுருவுவதை உணர்வீர்கள். ஒரு குருவோடு மிக நெருக்கமாக இருந்து ஆன்ம சாதனை செய்யக்கூடிய ஒரு சிலருக்கே கிடைக்கக் கூடிய அற்புதமான வாய்ப்பினை தியான லிங்கம் அனைவருக்கும் வழங்குகிறது'' என்றார் சத்குரு.

தியான லிங்கத்தை குருவாகப் பயன்படுத்த எளிய வழி, சில நிமிடங்கள் கண் திறந்து அதைப் பார்த்துக் கொண்டிருப்பதும் பின்னர் கண் மூடி அமர்வதும்தான். நீங்கள் எந்தக் காட்சியையும் நினைக்காமல், கற்பனை செய்யாமல், நினைவுக்குள் போகாமல் இருந்தால் முழு சக்தி வடிவான தியான லிங்கம் உங்கள் சக்தி நிலைக்குள் தானாகவே பதியும். இது நிகழ அனுமதித்தால் ஆயுசு முழுமைக்கும் அது உங்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கும்'' என்றும் சாதாரண மக்களுக்கு எளிய வழி சொல்லியிருக்கிறார் சத்குரு.

தியான லிங்கம் எந்த மதத்துக்கும் சொந்தமில்லை. அதன் மகத்துவத்தை உணர கடவுள் நம்பிக்கைக்கூட தேவையில்லை என்று தங்களுக்குச் சொல்லி வரும் சத்குரு, கர்ப்பக் கிரகத்தில் இந்து மதச் சின்னமாக கருதப்படும் விபூதியை வைத்திருப்பது ஏன் என்பது பல சாதகர்களின் நெடுநாள் சந்தேகம்.

''தியான லிங்கத்தின் ஏழு சக்கரங்களும் முழுமையாகத் தூண்டப்பட்டிருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரியும். அந்த சக்தி நிலையை நாம் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு கொட்டிக் கிடப்பதால், இங்கே சடங்குகளுக்கு எந்த முக்கியத்துவமும் கிடையாது. அவை சற்றும் பொருத்தமில்லாமலும் இருக்கும். மேலும் விபூதியை இந்து மதத்தின் சின்னமாகப் பார்க்காதீர்கள். இந்து என்பது மதம் அல்ல. அது கலாசாரத்தின் அடையாளம். அடுத்து விபூதி என்பது பாரம்பரியமாக உணர்வுகளைத் தூண்டி விடும் கருவியாகவே பயன்படுத்தப்பட்டு வருவதை உணர வேண்டும். அது உடலில் எங்கே பூசப்படுகிறது என்று பாருங்கள். உடலில் சக்தி நிலை இடம் பெற்றுள்ள ஏழு சக்கரங்களில் பெரும்பாலான சக்கரங்கள் இருக்கும் இடங்களில்தான் அது பூசப்படுகிறது. அந்த சக்தி நிலைகளைத் தூண்டிவிட உதவியாகத்தான் பூசப்படுகிறது. ஆனால், குறிப்பிட்ட விகிதத்தில் கலவையாக விபூதி தயாரிக்கப்பட வேண்டும். தியான லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டதே, மனிதனின் ஏழு சக்கரங்களையும் தூண்டி ஆன்ம விடுதலைக்கு வழிகாண வேண்டும் என்பதால்தான். அந்த நோக்கில் விபூதியும் உதவியாக இருப்பதால் அதை வைத்திருக்கிறோம்'' என்று விளக்கினார் சத்குரு.

சத்குருவின் எல்லையற்ற மகத்துவம் - தியான லிங்கம்

மனிதனை மேம்பட்ட நிலைக்குக் கொண்டு செல்ல தியான லிங்கத்தை நிறுவினாலும் அதன் அளப்பறிய சக்தி நிலையை யாரும் எதிர்காலத்தில் தீய நோக்கங்களுக்கு பயன்படுத்தக்கூடாது என்ற நோக்கில், தான் உடலை விடுவதற்கு இரண்டு, மூன்று வருடங்களுக்கு முன்னர் வெளிப்பிராகாரத்தில் மாந்திரீகக் கோயில் ஒன்றை அமைக்க இருப்பதாகவும் சத்குரு சொல்லியிருக்கிறார்.

மனமெனும் நந்தவனத்தில், ஆன்ம விடுதலைக்கான உயிர்ப்புக்களை மலர வைக்க, ஞான விதைகளைத் தூவும் சத்குருவின் தியான லிங்கம் பற்றிய இந்தத் தொடர் இங்கே முற்றுப் பெற்றாலும் அதன் 'எல்லையற்ற மகத்துவம்' என்றென்றும் தொடரும் என்பதில் துளியும் சந்தேகமில்லை.

தொகுப்பு: பரமேஷ்வர்

(நிறைவடைகிறது)